கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக்கலைமாணித் தேர்வு – 2016/2017 (ஜுன் 2019)

## SAS 4113 அரச இன முரண்பாடுகளுக்கான மானிடவியல் அணுகுமுறை

நேரம் : 03 மணித்தியாலங்கள்

முதலாம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்களையும் இரண்டாம் பகுதியிலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

---

### பகுதி – I

01 (அ) இனத்துவம் தொடர்பாக அன்ரனி ஸ்மித் (Antony Smith) குறிப்பிடும் வரையறையில் உள்ளடங்கும் அம்சங்களை தெளிவுபடுத்துக.

(10 புள்ளிகள்)

(ஆ) இன அடையாளத்துவத்தின் உருவாக்கம் தொடர்பாக விளக்கமளிக்கும் சிந்தனைப் பள்ளிகள் குறித்து விபரிக்குக.

(10 புள்ளிகள்)

02. (அ) முரண்பாடுகளின் வகைப்பாடுகளையும், அவற்றின் காரணிகளையும் விபரிக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) வன்முறை, சமாதனம் ஆகிய இரு எண்ணக்கருக்களின் வகைப்பாடுகளை தொடர்புபடுத்தி விளக்குக.

(10 புள்ளிகள்)

03. அதிகாரம் தொடர்பான பின்வரும் பார்வைகளிற்கு குறிப்பெழுதுக.

(அ) செயற்பாட்டுவாத பார்வை (10 புள்ளிகள்)

(ஆ) முரண்பாட்டுவாத பார்வை (10 புள்ளிகள்)

### பகுதி – II

04. “எல்லா சமூக முறைமைகளும் அரசாங்கங்களைக் (Governments) கொண்டிருக்கவில்லை ஆனால் அனைத்துச் சமூகங்களும் அரசியல் முறைமைகளைக் (Political System) கொண்டிருந்தன.” இக்கருத்தினை மானுடவியல் ஆய்வுகளை ஆதாரமாகக் கொண்டு மதிப்பீடு செய்க.

(20 புள்ளிகள்)

05. இனத் தேசியவாத முரண்பாடுகள் சிவில் யுத்தங்களுக்கு காரணமாகும் தன்மையினை எடுத்துக் காட்டொன்றின் துணையுடன் ஆராய்க.

(20 புள்ளிகள்)

06. முரண்பாட்டுக் கற்கைகளுடன் மானுடவியல் கொண்டுள்ள தொடர்பு மற்றும் பொருத்தப்பாடுகளை எண்ணக்கரு, முறைமையியல் சார்ந்த அடிப்படையில் பரிசீலனை செய்க.

(20 புள்ளிகள்)

07. அரசினது உருவாக்கம் குறித்த சமூக ஒப்பந்தக் கோட்பாட்டு தத்துவங்களினை ஒப்பிட்டு ஆராய்க.

(20 புள்ளிகள்)

*****